
# HEATHEN FESTIVALS.

Second Edition 5,000.—Total Copies, 7,000.

# திருவிழா.



MADRAS:

PRINTED FOR THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

By H. W. Laurie, at the Christian Knowledge Society's Press,

No. 11, Church Street, Vepery.

1870.

No. 53. *One Pie.*

# விக்கிரக வணக்கத்தை மறுத்தல்

---

### வெண்பா.

சிலைதை தமோதிற் தீவினைகட் குள்ளாகி
எந்தவிதப் புத்தியையும் என்ருமல்—அந்தந்தோ!
மான்மயக்கர் தாளும்ஒரு வல்ல பிதாஇருக்க
என்மயக்கி ருய்? மனமே!

இராகம், செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

### பல்லவி.

என் மயங்கிருய்? மனமே! என் மயங்கிருய்?
கான—மான் மயங்கிருப்போல்—

### சரணங்கள்.

க. அந்தர வான் புவி தந்த பராபரன்
ஆரென் றறிவால் அறியாமல்— என்.

உ. கல்லேயும், செம்பையும், மரக்கட்டைகளேயும்
கருகி, உருகி, தமோறி— என்.

ங. பராபரனே? பாகாலோ? தெய்வம் என
பகுத் தறிந்து பாராமல்— என்.

ச. பராபரன் தெய்வமானுல் அவரைப்
பணி, பசாசானுல் அதைச் சேவி— என்.

ரு. மனுடவதாரஞ் செய்த பரிபர
வ[illegible]வே கிறிஸ்து என்றறியாமல்— என்.

சு. எந்த விதத்திலும் யேசுகிறிஸ்துவால்
இரட்சிப் படைவதைத் தேடாமல்— என்.

136

.R.T. & B.S. GENERAL SERIES. **No. 59.**

# HEATHEN FESTIVALS.

# திருவிழா.

திருவிழா தேரும் தெருச்சுற்றிப் பார்த்ததும்
போரும் போரும்—இப்போ
செகநாதன் யேசு நம்மை
ஸ்திரமாய் ரட்சிப்பதைப் பாரும் பாரும்.

ஓ, சனங்களே! பல இடங்களிலும் இருக்கிற உங்கள் கோவில்களில் வருஷந்தோறும் ஒருதரமும் இரண்டு மூன்றுதரமுமாகத் திருவிழாக்களை நடத்திவருகிறீர்கள். அந்தச் சமயங்களில் அங்கங்குள்ள விக்கிரகங்களை யானை, குதிரை, இடபம், ஆட்டுக்கடா, மயில், அன்னம், கிளி, பூதம் முதலான வாகனங்களில் ஏற்றி, தெருவீதிகளில் எடுத்துச் சுமந்து சுற்றியும், தேர்மேலே வைத்து வலுவாய் இறுக்கிக் கட்டி இழுத்தும், இப்படிப் பத்துநாள்வரையும் வீ

ணுய்ப் பொழுதுபோக்கித் திருவிழா கொண் டாடுகிறீர்களே. உங்களில் எத்தனைபேரோ மிகுந்த தூரத்திலிருந்தும் அதற்கென்று புறப் பட்டுச் சரீர வருத்தத்தையும் ஆயாசத்தையும் பாராமல் வந்து கூடி, திருவிழா முடியும்வரை யும் வீணாய் இருந்துவிட்டுப் போகிறீர்கள். ஐயோ! நீங்கள் அதின் தன்மை உணராததினா லே அல்லவோ இப்படி வீண்பத்திகொண்டு அலைகிறீர்கள்? இவ்விதமாய் நீங்கள் அந்த விக் கிரகங்களைப் போற்றித் தொழுது திருவிழா கொண்டாடுவதினாலே உண்டாயிருக்கிற மதி கேட்டையும், அவமானத்தையும், நஷ்டத்தை யும் குறித்து நீங்கள் உணரும்படிக்குச் சில வற்றை எடுத்து, மூன்று பகுதிகளாகக் காண் பிக்கிறோம். கவனியுங்கள்:

க. திருவிழா கொண்டாடுவதினாலே உங்க ளிடத்தில் காணப்படுகிற மதிகேடு இன்னது என்று காட்டுகிறோம்; அதை விவரித்தால் மிக வும் பெருகும். ஒன்று கேட்கிறோம்: அங் கே நீங்கள் எதைச் சேவிக்கப் போகிறீர்கள்? பொன், வெள்ளி, செம்பு முதலிய லோகங்களி னாலே வார்த்தும் அடித்தும் வைத்திருக்கிற செயலற்ற விக்கிரகங்களை அல்லவோ சேவிக்

கப் போகிறீர்கள்? அவைகள் உங்களைக் காணு மா? உங்கள் விண்ணப்பத்தைக் கேட்குமா? உங்களுக்கு மாறுத்தரம் கொடுத்து உங்கள் குறைவுகளை நீக்கி உங்களைத் தேற்றுமா? தங்களைத் தாமே காப்பாற்ற வல்லமை இல்லாமல் உங்களால் பாதுகாக்கப்படவேண்டியிருக்கிற அந்த விக்கிரகங்கள் உங்களுக்கு எந்தச் சகாயத்தைச் செய்யும்? அல்லது நீங்கள் அவைகளை வணங்காவிட்டாலும் உங்களுக்கு எந்தத் தீமையை உண்டாக்கும்? அவைகளுக்குச் செய்யப்பட்டிருக்கிற கை கால் முதலிய உறுப்புக்கள் நம்முடைய அவயவங்களைப்போல இருந்தும், அவைகள் செயலற்றவைகளாய் வைத்த இடத்தில் கிடக்கத்தக்க தன்மை உள்ளவைகளே அன்றி வேறில்லையே. ஆனாலும் நீங்கள் அவைகளுக்குப் பயந்து, அவைகளுக்குமுன்பாக இனிமையான பழவர்க்கங்களையும் பால் சருக்கரை முதலிய மதுர பதார்த்தங்களால் சமைத்த அன்னம் முதலானவைகளையும் படைக்கிறீர்கள். அவைகள் அவற்றை எடுத்துத் தின்னுமா? மாட்டாதே. அப்படியிருக்க, அவைகளைத் தாழ்ந்து பணிகிறது மிகுந்த மதிகேடு அல்லவா?

தூணுக்குள்ளும் துரும்புக்குள்ளும் இருக்கிற கடவுள் விக்கிரகங்களுக்குள்ளே இல்லையா? ஆகையால், நாங்கள் விக்கிரகங்களை அல்ல, அவரையே தொழுதுகொள்ளுகிறோம் என்று நீங்கள் சொல்லுவீர்கள். ஒரு வீட்டையும் அதைக் கட்டின தச்சனையும் ஒன்று என்றும், அவன் அதில் பொருந்தியிருக்கிறான் என்றும் சொல்லுவீர்களா? மாட்டீர்களே. அப்படி இருக்க, ஒரு சிற்பாசாரியினால் செய்யப்பட்ட விக்கிரகத்துக்குள்ளே கடவுள் பொருந்தியிருக்கிறார் என்று எப்படிச் சொல்லலாம்? கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறது மெய்தான்; ஆயினும் அவர் மற்றெந்த வஸ்துக்களோடும் கலந்திரார். அவர் நித்தியர்; இவைகள் அநித்தியமானவைகள். அவர் மாறாதவர்; இவைகள் மாறிப்போகிறவைகள். ஆகையால் இவைகள் எப்படி அவருக்கு ஒப்பாகும்? உலகத்தையும் அதில் உள்ள யாவையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர் ஆனதால், தமது சர்வவியாபகத்தை விட்டுக் கைகளால் செய்யப்பட்ட கோவில்களில் நிலைத்து வாசம்பண்ணுகிறதும் இல்லை. யாதொன்று தமக்கு வேண்டுவதாக மனிதர் கைகளால்

பணிவிடை கொள்ளுகிறதும் இல்லை என்று அறியுங்கள்.

உ. திருவிழாவுக்குப் போகிறதினாலே பல அவமானங்களும் நேரிடுகிறது. உங்களை நிந்திக்கும்படி நாங்கள் அவைகளை எடுத்துச் சொல்லுகிறதாக எண்ணாதிருங்கள். நீங்கள் நல்லுணர்வு அடையும்பொருட்டே சொல்லுகிறோம். பாருங்கள்: அந்தக் கூட்டத்துக்குள்ளே மரியாதை உள்ளவர்களோடே அநேக துஷ்டர்களும் கலந்திருப்பார்களே. அவர்கள் நடுவில் ஸ்திரீ சனங்கள் பிரவேசிக்கையில், பல அவமானங்கள் நேரிடாமல் இருக்குமா? திருவிழாவுக்குப் போகிற புருஷர்களிலும் அநேகர் அங்கே வஸ்திராபரணங்களால் அலங்கரித்து, பூசி மினுக்கி நடனம் செய்துகொண்டுவருகிற தாசிகளைக் கண்டு, மதிமயங்கி, தூண்டிலில் இரையைக் கண்டு ஓடும் மீனைப்போல அவர்களைப் பின்றொடர்ந்து போய், தங்கள் கைப்பொருளையும் கொடுத்து, கொடிய நோயையும் வாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி, மிகுந்த இலச்சையோடே கிடந்து வருத்தப்படுவார்கள். அலங்கரிக்கப்பட்ட தேரைச் சுற்றிச் சில சுரூபங்கள் மிகவும் அவலட்சண ரூபமாய்ச் செய்து

வைத்திருக்கிறதே; அவைகளையும் காணத்தக்கதாக நீங்கள் உங்கள் ஸ்திரீ சனங்களையும் கூட்டிக்கொண்டு போகிறது மிகுந்த ஆச்சரியம்.

இதைப் பார்க்கும்பொழுது விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் மாயையாய் இருக்கிறார்கள். அவர்களால் இச்சிக்கப்பட்ட காரியங்கள் ஒன்றுக்கும் உதவாது. அவர்கள் தோழர்கள் யாவரும் வெட்குவார்கள். அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள் என்று தேவன் திருவுளம்பற்றினது ஒத்திருக்கிறது. (ஏசாயா, சச. அதி. கூ—கக.) ஆகையால் சத்தியமும், இலட்சணமும், நீதியும், கற்பும் உள்ளவைகள் எவைகளோ; சிநேகத்திற்கு ஏதுவும், நற்கீர்த்தியும், புண்ணியமும், புகழ்ச்சியும் ஆனவைகள் எவைகளோ அவைகளையே சிந்தித்து நடந்துகொள்வீர்களாக.

தாசி கேளிக்கையும் சங்கீதங் கேட்டதும்
போரும் போரும்—இப்போ
சாமியாம் யேசுநாதர்
சத்திய வேதத்தில் வாரும் வாரும்.

ரு. திருவிழா கொண்டாடுவதினால் உண்டாகிற நஷ்டத்தைப் பாருங்கள்: திருவிழாவுக்குப் புறப்படுகிறவர்களில் எத்தனைபேர் தங்கள் வீட்டிலும் நிலங்களிலும் மற்ற இடங்களி

னும் அவசியமாய்க் குறை தீர்க்கவேண்டிய வேலைகளை எல்லாம் நாநாவிதமாய்ப் போட்டுவிட்டு வருகிறார்கள். அந்தத் திருவிழாக் கூட்டத்தில் நெருக்கப்பட்டுச் சில பெண்களும் பிள்ளைகளும் தங்கள் காதிலும் கழுத்திலும் இட்டிருக்கிற உடமைகளில் சிலவற்றை வழுவவிட்டும், சிலவற்றைக் கள்ளருக்குப் பறிகொடுத்தும் சங்கடப்பட்டுக் கூக்குரலிடுகிற சத்தத்தை அங்கங்கே கேட்கலாம். சிலர் நேர்த்திக்கடனாக வந்து தேர் ஓடும் தெருவில் உருண்டு கொடுத்து அவதிப்படுவதினாலே, முன் தங்களுக்குச் சற்றே இலெகுவாய் இருந்த வியாதியும் அதிகரித்து நெடுநாள் படுக்கையில் விழுகிறார்கள்.

தேரோடுகிற நாளில் சகல சனங்களும் தேர் இழுக்க வரும்படி ஊர்கள்தோறும் முரசடிக்கப்பட்டதின்பின்பு எத்தனைபேரோ கட்டாயத்தோடே முறுமுறுத்துக்கொண்டு போவார்கள். இப்படி எல்லாரும் சேர்ந்து வடம் பிடித்துக் கானல் பறக்கும் வெயில் இருந்தாலும், நடுக்க வைக்கும் அடமழை இருந்தாலும் அதிக வருத்தத்தோடே தடம் புரண்டு இழுப்பார்கள். அவர்களோடே யானைகளை உதவிக்கு விட்டுச் சீக்கிரம் நகளாதிருந்தால் எத்தனைபேரோ அடியும்

மிதியும் படுவார்கள். இதற்கு இடையில் தேரின் அச்சு முறிந்ததானால், சிலர் கை கால் குறைப்பட்டுச் சேதம் அடைகிறதும் அல்லாமல், அதின்நிமித்தம் இரண்டு மூன்றுநாள் வரையும் சனங்கள் அவதிப்பட்டும் போவார்கள். ஐயோ! இப்படித் திருவிழாக்களை நடப்பிக்கிறவர்களும், அவற்றைக் கொண்டாடுகிறவர்களும் தங்கள் முன்னோர்களுக்குள் இருந்த ஞானிகளில் சிலர் பாடினவைகளைச் சிந்தித்தால் நலமாய் இருக்கும். அவற்றில் ஒன்று இரண்டைப் பாருங்கள்:

ஊரிலுள்ள மானிடர்க ளொன்றதாகக் கூடியே
தேரிலே வடத்தைப்பூட்டிச் செம்பைவைத் திழுக்கிறார்
ஆரிலு மறியொண்ணாத ஆதிநாத கர்த்தனைப்
பேரில்லாத மாந்தர்பண்ணும் பித்தைப்பாரும் பாருமேன்.

[வோனை
தொழுமா தவத்துக் குரியோனைச் சுருதிமறைக்குள் முடி
நழுகவிட்டால் நலமாமோ நடுகலுனக்குத் துணையாமோ
கழுவிச்சிலைக்குப் பணிபூட்டிக் கர்த்தரிதுவேமெய்யென்று
இழவுமரத்தைத் திரள்கூடி யாருமினக்கெட்டிழுப்பானேன்
என்பதே.

இவைமுதலான பாட்டுகளை நீங்கள் உற்றுணர்ந்துகொண்டீர்களானால், இத்தனைப் புத்தியீனமாய் நஷ்டம் அடைவதற்கு இடங்கொடுப்பீர்களா? கேளுங்கள்: வானம் எனக்கு ஆசன

மும் பூமி எனக்குப் பாதப்படியுமாய் இருக்கிறது என்று தேவனாகிய பராபரன் திருவுளம்பற்றியிருக்கிறார். அப்படி எங்கும் வியாபித்திருக்கிற அவரை நீங்கள் பணிந்துகொள்ளாமல் பல விக்கிரகங்களை உருவாக்கி, தேரில் வைத்து இழுத்துத் திருவிழாக் கொண்டாடி, இப்படி வீண் ஆராதனை செய்கிறீர்களே; இதினாலே உங்களுக்கு உண்டான இலாபம் என்ன? மானக்கேடும் கால நஷ்டமும் பொருள் நஷ்டமுமே அல்லாமல், ஒரு நன்மையும் இல்லையே. ஆகையால், “பொல்லாங்கைச் செய்யப்போகும் கூட்டத்துக்குப் பின்செல்லாதிருப்பீர்களாக” என்று இருக்கிற வேதவாக்கியத்தை உற்றுணர்ந்துகொள்வீர்களாக. (உ. மோசே, உ௩. உ.)

தேவனானவர் ஆவியாய் இருக்கிறபடியால், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியினாலும் உண்மையினாலுமே தொழுதுகொள்ள வேண்டும். நீங்கள் அவ்விதமாய்த் தொழுதுகொள்ளாமல், அவலட்சணமும், அருவருப்பும், புத்தியீனமுமான ஆராதனை செய்துவருகிறதினாலே, தேவனைக் கனஈனப்படுத்தி உங்கள் ஆத்துமாவுக்குக் கெடுதல் செய்கிறதும் அல்லாமல், உங்களுக்கு ஆக்கினையையும் வருவித்துக்

கொள்ளுகிறீர்கள். இதை நீங்கள் உற்றுணராததினாலே அல்லவோ உங்களுடைய கோவில்களில் ஒவ்வொன்றில் நேர்த்திக்கடனாகவும் காணிக்கையாகவும் வருஷந்தோறும் அநேக பணங்களைக் கொடுக்கிறீர்கள். அவைகளால் பூசாசாரிகளும் பிராமணர்களும் வேசிகளுந்தானே சீவனம் பண்ணுகிறார்கள். இவ்வளவு பொருளையுங்கொண்டு அன்னவஸ்திரம் இல்லாத எளியவர்களுக்குச் சகாயஞ்செய்யவாவது, குருடர், சப்பாணிகள், ஊமையர் முதலான அங்கவீனர்களுக்கு உதவி, மற்றும் தர்ம கிரியைகளைச் செய்யவாவது செலவுபண்ணினால் எத்தனையோ நன்மையாய் இருக்கும். நீங்கள் அப்படிச் செய்யாமல் பணத்தைக் கொடுத்தும் பாவத்தை அல்லவோ செய்கிறீர்கள்?

ஆ, சிநேகிதர்களே! நீங்கள் அழியாத ஆத்துமா உள்ளவர்களாயும், உங்களைப் படைத்த கர்த்தாவுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்களாயும் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் ஆத்துமாவைக்குறித்துக் கவலையற்றவர்களாய் இருக்கலாமா? "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தன்னை வணங்க" என்று உங்களுக்குள்ளே வழங்குகிற பழமொழியின்படியே, நீங்கள் கர்த்தாவை வணங்கும்படிக்கு அல்லவோ படைக்கப்பட்டிருக்கிறீர்கள். அப்படி இருக்க, நீங்கள் அவனை அறிந்து வணங்காமல், அவரால் விலக்கப்பட்ட

விக்கிரகஆராதனைக் கிரியைகளைச் செய்துவருகிறீர்களே. அவர் இப்பொழுதே உங்களுக்குப் பதில்செலுத்தாமல் இருக்கிறதினாலேயா உங்கள் அக்கிரமத்தைப் பெருகப்பண்ணுகிறீர்கள்? ஆ! அவர் அளவில்லாத இரக்கம் உள்ளவராய் நீங்கள் எப்பொழுது தம்மிடத்திற்கு மனந்திரும்புவீர்கள் என்று பார்த்து இருக்கிறதினாலே அப்படிப் பொறுமையோடே இருக்கிறார். அவர் தமது இரக்கத்தைக் காட்டுகிற இக்காலத்தில்தானே நீங்கள் சீர்திருந்த வகைதேடுங்கள். நீங்கள் இந்தப் பாவநிலைமையிலே நிலைத்திருந்தால் அவர் எப்பொழுதும் உங்களிடத்தில் பொறுமையாய் இருப்பார் என்று சற்றும் எண்ணாதிருங்கள். அவர் திருவுளம்பற்றின வசனத்தைக் கேளுங்கள்:

"எனக்குரிய கனத்தை மற்றொரு வஸ்துவுக்கும், எனக்குரிய துதியை விக்கிரகங்களுக்கும் செலுத்தினால், பொறுக்கமாட்டேன்" என்கிறார். (ஏசாயா, ௪உ. அ.)

"அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும் நிறைந்திருக்கிறது; தங்கள் கைகளின் கிரியையைப் பணிந்துகொள்ளுகிறார்கள். பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் நாளிலே, அவர் பயங்கரத்தினாலும், அவர் முக்கியத்தின் மகத்துவத்தினாலும், கல்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு, மனிதன் பணிந்துகொள்ளத்

தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான். விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்." (எசாயா, ௨. அ, ௰அ, ௨௰, ௨௧.)

ஆ! உங்கள் மரண நாளும் நியாயத்தீர்ப்பும் சமீபமாய் இருக்கிறது என்று சிந்தித்துக்கொள்ளுங்கள். நீங்கள் குணப்படாமல் மரித்தால், உடனே தேவ கோபாக்கினை உங்களைப் பிடிக்கும்; அப்பொழுது எந்தப் போக்குச் சொல்வீர்கள். பசாசானவனும் அவனுடைய தோழர்களும் கிடந்து அழுந்தும் அழுகையும் பற்கடிப்பும் உள்ள கொடிய நரகத்தில் தள்ளப்பட வேண்டிவரும். அப்படி உங்களுக்கு வாராமல் இப்பொழுதே உங்கள் வீண்பத்தி ஆராதனைக் கிரியைகளை எல்லாம் விட்டு, அரூபியாய் இருக்கிற தேவனை ஆவியினாலும் உண்மையினாலும் தொழுதுகொண்டு, அவர் அனுப்பின உலக இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துநாதரை விசுவாசித்து, அவர் மூலமாய்ப் பாவமன்னிப்பையும் பரிசுத்த குணத்தையும் நித்திய பாக்கியத்தையும் அடைந்துகொள்ளும்படி நல்ல வகையைத் தேடிக்கொள்வீர்களாக.

முற்றிற்று.